1995 ஏப்ரல் 26]

454—

கூத்தம்பாளையத்தில் மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைத்தல்

**24476—டாக்டர் வெ. சரோஜா:*

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதி, மல்லசமுத்திரம் ஒன்றியம், மொஞ்சலூர் பஞ்சாயத்து கூத்தம்பாளையத்தில் பால் உற்பத்தியாளர் மகளிர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 22–2–1994 முதல் சங்கம் பதிவு செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறது.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மல்லசமுத்திரம் ஒன்றியம், மொஞ்சனூர் பஞ்சாயத்து கூத்தம்பாளையத்தில் பால் உற்பத்தியாளர் மகளிர் சங்கம் ஏற்படுத்தியமைக்கு நன்றியை தெரிவித்து, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் 1994–95ஆம் ஆண்டில் 224 மகளிர் பால் உற்பததியாளர் கூட்டுறவுச் சங்களும், 54 அனைத்து மகளிர் பால் உற்பத்தியாளர் சங்களும் அமைத்து நாள் ஒன்றுக்கு 16.60 லட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்து சாதனை படைத்த அன்னையின் ஆட்சியில் என்னுடைய தொகுதியில் மகளிர் பால் உற்பத்தியாளர் சங்கங்கள் எத்தனை இயங்குகின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்ககிரி தொகுதியில் மொத்தம் 96 சங்கங்கள் இயங்கி வருகின்றன. அதிலே மகளிர் பால் உற்பத்தி கூட்டுறவுச் சங்கம் 8.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் பால் உற்பத்தியாளர் சங்கங்களில் தற்போது ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்த பெரும்பாலான மகளிர் முன் வருவதால் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய பொற்கால ஆட்சியில் ஆதி திராவிட மகளிர் பால் உற்பத்தியாளர் சங்கம் ஏற்படுத்தும் சிறப்பு திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா? ஆம் எனில் அதை நடைமுறைப்படுத்த அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு தீவிரமாக இந்தத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 455, திரு. ஜெ. பாலகங்காதரன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

455—

தொழிற்சாலை புகையால் விளையும் சுகாதாரக் கேடுகளைத் தடுத்தல்

*37872—திரு. ஜெ. பாலகங்காதரன் :

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குளத்தில் இருக்கும் அரசு சிமெண்ட்ஸ் தொழிற்சாலையிலிருந்து வெளியாகும் புகையால் விளையும் சுகாதாரக் கேடுகளைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தின் ஆலங்குளம் சிமெண்ட் ஆலை 1970-ல், மிட்பிராசசிங் டெக்னாலஜி முறையில் சிமெண்ட் தயாரிக்க நிறுவப்பட்டது. இந்த ஆலையிலிருந்து வெளியேற்றப்படும் காற்று பெரும் அளவுக்கு கரியையும் சிறிது அளவு சுண்ணாம்பையும் கலந்ததாக, மாசு கட்டுப்பாடு வாரியம் நிர்ணயித்த அளவுக்கு அதிகமாக மாசு வெளிவருகிறது. அதைப் பெருமளவில் குறைக்க ரூ. 125 லட்சம் செலவில் மாசுக் காற்றை ரீ சைக்ளிங் (Recycling) முறையில் சுத்தப்படுத்தும் திட்டமும், 95 லட்சம் ரூபாய் செலவில் Electro Static

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS